செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டத்தில் செங்கல்பட்டு தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி அவர்களை மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிமுகம் செய்து வைத்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து உரையாற்றினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ்.நரேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் எம்.டி. லோகநாதன், கே.பி.ராஜன், சந்தானம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (7-4-2026) காலை 7 மணிக்கு தொடங்கி 168வது வட்டத்தில் நடந்து சென்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். தி.மு.கழக வேட்பாளருக்கு ஆதரவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன் வாக்குச் சேகரித்தார். அப்போது சைதைத் தொகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி பொங்க அன்புடன் வரவேற்றனர். இந்த வாக்குச்சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், சைதைத் தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க ம.ஜேக்கப், ம.தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க ஆனந்தன், எஸ்.டி.பி.ஐ. அபுதாகிர், ம.ம.க. சாகுல்அமீது, கதிர், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.

5 ஆண்டுகளில் திருவேற்காடு நகராட்சியில் மட்டும்

ரூ.510.63 கோடி மதிப்பில் திட்டப் பணிகள் நிறைவேற்றி சாதனைகள்!

வீதிவிதியாக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தீவிர வாக்கு சேகரிப்பு!

திருவள்ளூர் 08;

ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் திமுக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வீதி வீதியாக சென்று தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

ஆவடி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளராக ஆவடி சா.மு.நாசர் களம் காண்கிறார். தொகுதி முழுவதும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் அவர் நேற்று திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட 3, 4, 5, 6, 7 மற்றும் 10வது வார்டு பகுதிகளில் நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி தலைமையில் வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். அப்போது வட்ட செயலாளர்கள் கே.பி.எஸ். சுதாகர், பொன்.மனோகரன், துரைகோபால், பிரதானம், தெய்வசிகாமணி, விநாயகம், ஆகியோர் உற்சாகமாக வரவேற்றனர்.

வாக்கு சேகரிப்பின் போது சா.மு.நாசர் பேசியதாவது:

ஆவடி தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளில், ரூ.21. 38 கோடி மதிப்பீட்டில், 53.30 கி.மீ. நீளத்திற்கு, 387 எண்ணிக்கையில் தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ரூ.27.33 கோடி மதிப்பீட்டில், 43, 09 கி.மீ. நீளத்திற்கு, 191 எண்ணிக்கையிலான தார் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில்

உள்ளது. கடந்த 3 ஆண்டுகளில், ரூ.29. 33 கோடி மதிப்பீட்டில், 15. 39 கி.மீ. நீளத்திற்கு, 23 எண்ணிக்கை சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது, ரூ.5.61 கோடி மதிப்பீட்டில், 4.62 கி.மீ நீளத்திற்கு, 30 எண்ணிக்கை சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.53.63 கோடி மதிப்பீட்டில், 25.17 கி.மீ நீளத்திற்கு, 20 எண்ணிக்கையிலான, மழைநீர் வடிகால் அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது

நரம்பல் ஐசிஎல் நகர் பகுதியில் மழைக் காலங்களில் வெள்ள நீரினை வெளியேற்ற ரூ.1.80 கோடி மதிப்பீட்டில், 1.40 கி.மீ நீளத்திற்கு பைப் லைன் அமைத்து மழைநீர் வெளியேற்றும் பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற உள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில், ரூ.7.48 கோடி மதிப்பீட்டில், 6,771 எண்ணிக்கையிலான பழைய தெருவிளக்குகள் புதிய எல்இடி விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. ரூ.1.20 கோடி மதிப்பீட்டில், புளியம்பேடு பகுதியில் புதியதாக நகர்ப்புற சுகாதார நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.990.60 கோடி மதிப்பீட்டில், திருவேற்காடு, மாங்காடு மற்றும் பூந்தமல்லி ஆகிய நகராட்சிகளை உள்ளடக்கி ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் திருவேற்காடு நகராட்சிக்கும் மட்டும் ரூ.510.63 கோடி மதிப்பில் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

ரூ. 110 கோடி மதிப்பீட்டில், திருவேற்காடு நகராட்சிக்கு, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் குடிநீர் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது. ரூ.60 லட்சம் மதிப்பில் சமுதாயக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில் ரூ.87 கோடி மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. இது போன்ற மக்கள் நலத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்த உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்று அவர் கூறினார். இந்த பிரச்சாரத்தில் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.பிரியாகுமார், நிர்வாகிகள் பெனியமின், அ.க.நடராஜ் வெ. குமாரசாமி, அரசுபானு, ஜெ.சரவணன், செல்வதுரை, ஜோதிநாதன், பாண்டுரங்கன், மா.அப்பு(எ)ஜெபராஜன், ஐ.ஜேக்கப், என்.ராஜி, குமார் கெஜா, ரங்கதுரை, பரிசமுத்து, இளங்கோவன், கண்ணன், காந்தி, பன்னீர் செல்வம், சாது, உமாபதி, ஜெகன், ஆசைத்தம்பி, இம்மானுவேல், நித்தீஷ், அலேக்ஸ், இளைஞரணி நிர்வாகிகள் மா.அப்பு(எ) ஜெபராஜன், நாராயணன், நரேஷ், குடியரசு, சுரேஷ், ஜான், பிரபு, முருகன், மனோஜ் உள்ளிட பலர் கலந்து கொண்டனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திராவிட முன்னேற்ற கழக, மயிலாப்பூர் தொகுதி வெற்றி வேட்பாளர் த.வேலு 124வது வட்டத்தில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். இந்த நிகழ்வின்போது அவரை வரவேற்று அப்பகுதி வாழ் வசிக்கும் பிராமண சமுதாய மக்கள் மிக சிறப்பான முறையில் தங்களது ஆதரவை தெரிவித்தனர். இந்த நிகழ்வின் போது பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி, வட்ட கழக செயலாளர் தாஸ் மற்றும் கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மாவட்ட பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி, - இரா.ஜெயராமகிருஷ்ணன் முன்னிலையில்!

அ.தி.மு.க. நிர்வாகிகள் 15க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

கணியூர் பேரூர் கழக செயலாளர் கே.ஏ.காஜாமைதீன் தலைமையில்

திருப்பூர், ஏப்.8-

திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், கணியூர் பேரூராட்சி அ.தி.மு.கவில் 16 வருடம் பேரூர் கழக செயலாளராக இருந்த கே.ஏ.காஜாமைதீன் தலைமையில் 15க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணன் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியால் மட்டுமே தமிழ்நாட்டை தலை நிமிரச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், கணியூர் பேரூராட்சி அ.தி.மு.கவில் 16 வருடம் தொடர்ந்து பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி முன்னாள் இயக்குநர், மாவட்ட வேளான் விற்பனை குழு முன்னாள் இயக்குநர் கே.ஏ.காஜாமைதீன், 16 வருடம் தொடர்ந்து பேரூர் கழக துணைச் செயலாளர் பூக்கடை ஆர் சுப்பிரமணி, முன்னாள் ஒன்றிய ஆசிரியப் பேரவை செயலாளர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி முன்னாள் இயக்குநர், 15 வருடம் ஒன்றிய இலக்கிய அணிச் செயலாளர் எம்.யா.அப்துல்ரஹீம், 5 முறை பேரூர் கழக அவைத் தலைவர் எஸ்.நடராஜ், 16 வருடம் தொடர்ந்து பேரூர் கழக துணைச் செயலாளர் கே.வி.டி.ராணி, 16 வருடம் தொடர்ந்து பேரூர் கழக மாவட்ட பிரதிநிதி வி.ஈஸ்வரி, 16 வருடம் தொடர்ந்து பேரூர் கழக இளைஞர் அணி செயலாளர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு முன்னாள் இயக்குநர் கே.வி.டி.கௌதம், 12 வது வார்டு செயலாளர் துர்க்கை ராஜ்

7வது வார்டு முன்னாள் கிளைச் செயலாளர் வி.நாகராஜ், இளைஞர் அணி பாசறைச் செயலாளர் டி.கார்த்திக் பாபு, தகவல் தொழில்நுட்ப அணி துணை தலைவர் வி. கருப்பசாமி, அம்மா பேரவை முன்னாள் செயலாளர் எம். ஆறுமுகம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு முன்னாள் தலைவர் எஸ் நாகேஸ்வரி, அம்மா பாசறை பொருளாளர் என்.நவீன் குமார், அண்ணாநகர் பகுதி பிரதிநிதி நாகராஜ் உள்ளிட 15க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணன் வேட்டி, துண்டு அணிவித்து வாழ்த்தி வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் சாகுல் அமீது, மாவட்ட பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி, கணியூர் பேரூர் கழக செயலாளர் பாலகிருஷ்ணன், கணியூர் பேரூராட்சி தலைவர் செந்தமிழ் செல்வி பத்மநாபன், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கரும்புக்கடை சாதிக், மாவட்ட பொறுப்புக்கு உறுப்பினர் ராதிகா இளங்கோவன், வழக்கறிஞர் மோகன், சங்கர் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி உறுப்பினர்கள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

125 'அ' வட்டத்தில் வாக்குச் சேகரிப்பு!

வட்டச் செயலாளர் கோ.கண்ணன் அறிக்கை!

சென்னை, ஏப். 6-

சென்னை தென் மாவட்டம், வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பு நாளை 09.04.2026 (வியாழக் கிழமை) 125 அ வட்டத்தில் பிரச்சாரம் செய்யும் இடங்கள் வருமாறு:

காலை 9 மணியளவில் பரி பூரண விநாயகர் கோவில் தெரு, அருண்டேல் தெரு, பவுடர் மில் 1வது, 2வது தெரு, சோனாசலம் தெரு, போலீஸ் குவாட்டர்ஸ், காங்கேயபுரம், பஜார் தெரு, அப்பு முதலி தெரு, நடுத் தெரு

மாலை 4 மணியளவில் மயிலை மாங்கொல்லை, சாலை தெரு, சித்திரை குளம் வடக்கு, முத்து கிராமணி தெரு, ரோசரி சர்ச் ரோடு, மள்ளிமா நகர், முத்துகிருஷ்ணன் தெரு, ஜோசப் காலனி, அப்பு 1 வது, 2 வது தெரு, வெங்கடேசன் தெரு, டுமிங் குப்பம் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக செயல் வீரர்கள், BLA 2,BLC அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 125 அ வட்டச் செயலாளர் கோ.கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக களம் காணும் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மற்றும் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் எம்.கே.மோகன் ஆகியோருடன் இணைந்து வேட்புமனுவை தாக்கல் செய்தார். உடன் பகுதி கழகச் செயலாளர்கள் ந. இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர் பங்கேற்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் திருவள்ளூர் தொகுதி கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன், திருத்தணி தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி, ஆதரித்து தேர்தல் களப்பணியாற்றும் விதமாக திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் தகவல் தொழில் நுட்ப அணியுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.குமரன், ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேமுதிக தொகுதி பார்வையாளர் நிஜாமுதீன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கிரண், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஜி. சித்திக் அலி,மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் ரேணுகுமார், விக்னேஷ்வரி, தினகரன், கிஷோர், அ.அமர்நாத், உள்ளனர்

மயிலை மேற்குப் பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப் 8

கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனையில் களத்தில் இளைஞர் அணி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து உதயசூரியனுக்கு வாக்கு கேட்டு மயிலை மேற்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி சார்பில் இன்று (8.4.2026) 122 அ வட்டம் ஆ நாகராஜன் வட்டச் செயலாளர் தலைமையில் மற்றும் நாளை (9.4.2026) 123 வது வட்டம் மூ.இ.ஏழுமலை வட்டச் செயலாளர் தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் முன்னிலையில் ஆகிய தேதியில் மாலை 4 மணியளவில் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடைபெறுகிறது.

இதில் நா.உதயன், கு. லோகேஷ், ஜே.ராஜேஷ், அரவிந்த் ரமேஷ் ஆகியோர் வர வேற்கின்றனர்.

எனவே மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி பகுதி துணை வட்ட அமைப்பாளர்கள் வட்டத்துணை அமைப்பாளர்கள் பாக அமைப்பாளர்கள் மற்றும் கழக செயல் வீரர்கள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் சீ.வி. திவான்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து களத்தில் இளைஞர் அணி பரப்புரையினை 114அ வட்டத்தில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் தனுஷ் தலைமையில் வட்டச் செயலாளர் தமிம் அன்சாரி முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.